**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்**

அசல் வழக்கு எண்: 92/2019
நாள்: 27.11.2025
PW1
பெயர் : வெங்கடாச்சலம்
த/பெ : பெரியான் பூசாரி
வயது : 75
ஊர் : அன்னவாசல்

Solemnly affirmed by Thiru.Veeramanikandan , JA of this Court in accordance with the provisions of Act X of 1873

**Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on** the **day 27th day of November 2025.**

**As Per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No. 74663/2024/F1 – Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**
**Aathar Card of the Witness verified.**

**13 – ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் இரண்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எழுத, படிக்க தெரியுமா என்றால் ஓரளவு தெரியும். இந்த வழக்கு தாக்கல் செய்ய அனைத்து விவரங்களும் நான் வழக்கறிஞரிடம் சொன்னதன் அடிப்படையில் தான் வழக்குரை தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான தாக்கல் செய்துள்ள வழக்கில் என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் கோயிலுக்குள் செல்ல விடாமல் தடுத்ததற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்குரையில் கண்டுள்ள கோவில்கள் அனைத்தும் அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட இடத்தில் உள்ளது என்றால் சரிதான்.

2. மேற்படி கோவில்கள் இந்து அறநிலையத்துறைக்கு சொந்தமானது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் சிறிய கோவில்கள், கிராமத்து கோவில்கள் என்ற வகைப்பாட்டில் வரும் என்றால் சரிதான். பொதுவாக அரசுக்கு சொந்தமான இடத்தில் உள்ள கோவில்களில் யார் வேண்டுமானாலும் சாமி கும்பிடலாம் என்றால் சரிதான். நான் கூறியுள்ள கோவில்கள் அனைத்தும் அரசுக்கு சொந்தமான இடத்தில் இந்து அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் இருப்பதால் அதன் முழு நிர்வாகமும் அறநிலையத்துறையினரிடம் இருக்கும் என்றால் சரியல்ல, நாங்கள் தான் நிர்வகித்து வருகிறோம்.

3. அறநிலையத் துறையில் இருந்து நாங்கள் நிர்வாகம் பார்த்ததற்கு எங்களுக்கு எழுத்துப்பூர்வமான உத்தரவு எதுவும் வரவில்லை என்றால் இல்லை. அந்த கோவில்

சம்மந்தமாக எந்த முடிவுகளும் எடுப்பதற்கு அவர்களுக்கு அதிகாரம் உள்ளது என்றால் இல்லை, எனது அப்பா பெயரில் பட்டா கொடுத்துள்ளார்கள், அதன் அடிப்படையில் நாங்கள் நிர்வகித்து வருகிறோம் .மேற்சொன்ன பட்டாவை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது அப்பா பெயருக்கு இந்த கோவில் சம்மந்தமாக பட்டா வழங்கப்பட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. இந்த கோவில்களில் இந்து அறநிலையத் துறையால் நியமிக்கப்பட்ட டிரஷ்டுகள் உள்ளார்கள் என்றால் இருந்தார்கள், இப்போது இல்லை. அவ்வாறு டிரஷ்டிகளாக இருந்த நபர்களில் எங்கள் சமூகத்தை சேர்ந்த ஒருவரும், எங்கள் சமூகத்தை சாராத இருவரும் இருந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. அவ்வாறு இருந்தார்கள் என்றாலும், இந்த வழக்கு பாதிகக்ப்படும் என்பதற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் எனறால் சரியல்ல .என்னுடைய வழக்குரை பக்கம் இரண்டு, பத்தி இரண்டில் "12.09.1972 ம் தேதியில் ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அந்த உத்தரவை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்திருப்பேன். பின்னிட்டு 09.09.1976 ம் தேதி Ap.No. 1/72 ல் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அந்த மேல்முறையீடு வழக்கின் நகல் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

5. இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் மற்றும் இணை ஆணையர் இந்த வழக்கு சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என 1972 ம் வருடம் மற்றும் 1976 ம் வருடங்களில் உத்தரவு பிறப்பித்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.மேற்படி கோவில்களில் எனக்கு தனிப்பட்ட முறையில் என்ன உரிமைகள் உள்ளது என்று இந்த வழக்கில் கட்சி செய்து வருகிறேன் என்றால் எனது அப்பா பூசாரியாக இருந்ததற்கு பின்னிட்டு நான் பூசாரியாக இருந்து வருகிறேன். மேற்படி கோவில்கள் பிரகாரம் இல்லாத கோவில்கள் என்றால் சரியல்ல, பிரகாரம் உள்ளது.

6. அந்த பிரகாரங்கள் இந்துசமய அறநிலையத்துறையிள் அனுமதி பெற்று கட்டப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி கோவில்களில் சாமி கும்பிடுவதற்கு ஊரில் அனைவருக்கும் தலைக்கட்டு வரி வசூல் செய்து சாமி கும்பிடுவார்கள் என்றால் இல்லை, திருவிழாவின் போது மட்டும் தான் வரி வசூல் செய்வோம். நாங்கள் கோவில்களில் நடைபெறும் பூஜைகள், சாமியாடுதல், கிடாவெட்டுதல் போன்ற முக்கிய நிகழ்வுகளின் போது கலந்து கொள்வதற்கு இந்த பிரதிவாதிகள் ஒரு போதும் தடை ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. மேற்சொன்ன பூஜைகள், சாமியாடுதல், கிடாவெட்டுதல் போன்றவை எங்களது உரிமை என கோரி தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் அவ்வாறு மேற்சொன்ன உரிமையை கோரி எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல.

7. எனது வழக்குரை பத்தி 3 ல் நான் மேற்படி கோவில்களில் சாமியாடுதல், கிடாவெட்டுதல், பூஜை செய்யக்கூடாது என 4வது பிரதிவாதி மற்றும் 4 வது கரைகாரர்கள் பிரச்சனை செய்வதாக சொல்லியுள்ள நிலையில் எத்தனை வருடங்களாக

அவ்வாறு பிரச்சனை செய்து வருகிறார்கள் என்றால் சுமார் 20 வருடங்களாக பிரச்சனை செய்து வருகிறார்கள். நான் மேற்படி கோவில்களில் சாமியாடுவதற்கும், கிடாவெட்டுவதற்கும், பூஜை செய்வதற்கும், ஏதேனும் சட்டப்படியான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவ்வாறு ஆவணங்கள் ஏதும் இல்லை. எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணம் இந்த வழக்கிற்கு சம்மந்தமில்லாத ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் இந்த வழக்கு சொத்திற்கு சம்மந்தமில்லாத ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணம் இந்த வழக்கு சொத்திற்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லாத ஆவணம் என்றால் சரியல்ல.

8. வா.சா.ஆ. 4 மற்றும் வா.சா.ஆ. 5 ன் ஆவணத்தின் அடிப்படையில் இந்த வழக்கை விசாரிக்கும் அதிகாரம் இந்து சமயஅறநிலையத்துறை சட்டம் பிரிவு 108 ன் கீழ் தடை செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்துசமயஅறநிலையத்துறை உதவி ஆணையரிடம் மனு மற்றும் விசாரணை நிலுவையில் உள்ள நிலையில் இந்த வழக்கு தாக்கல் செய்ய வழக்குமூலம் எழவில்லை என்றால் சரியல்ல. இந்துசமயஅறநிலைய உதவி ஆணையரிடம் வா.சா.ஆ.4 மற்றும் வ.சா.ஆ.5 ஆவணம் சம்மந்தமான முறையீடு நிலுவையில் உள்ள நிலையில் எந்த பரிகாரமும் பெற என்னால் முடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 ஆவணம் இந்த வழக்கிற்காக காவல் துறையில் பொய்யாக புகார் கொடுத்து வழக்கிற்காக ரசீது பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

9. மேற்படி கோவில்களில் சாமியாடுதல், கிடாவெட்டுதல், பூஜை செய்தல் போன்றவை சிவில் உரிமைகள் என்ற கோதாவில் வராத என்பதால் நான் கோரியுள்ள பரிகரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்து வாதிக்கோ, பிரதிவாதிக்கோ சொந்தமான கோவில் அல்ல என்பதால் யாரும் தனிப்பட்ட முறையில் பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல. மேற்படி கோவில்களில் எனக்கு உரிமை உள்ளது என்றாலும், அது இந்துசமய அறநிலையத்துறையயின் துணை ஆணையர் மற்றும் இணைஆணையர் மட்டுமே விசாரணை செய்ய இயலும் என்பதால் என்னுடைய வழக்கு தள்ளுபடி அருகதையுடையது என்றால் சரியல்ல. நான் தெளிவான பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு தள்ளுபடி அருகதையுடையது என்றால் சரியல்ல.